## அகமண முறையை அகற்றுவோம்!
## ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவோம்!

### உறவு முறைக்குள் மணம் செய்யும் முறைகள் என எவை நம் சமூகத்தில் உள்ளன ?

அத்தை மகன் / மகள், மாமன் மகள் / மகன், தாய் மாமா / சகோதரி மகள் ஆகியோரை மணக்கும் முறை இந்து மதத்தினரிடம் உள்ளது. சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா பிள்ளைகளை மணப்பது முஸ்லிம்களிடம் உள்ள வழக்கம்.

### இந்த முறை தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளதா ?

நெருங்கிய உறவுக்குள் மணம் முடிக்கும் வழக்கம் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆதிக்கத்தில் இருக்கும் சில நாடுகளிலும், தமிழ்நாட்டில் உள்ள இந்து மதத்தைப் பின்பற்றும் மக்களிடமும் தான் அதிகமாக உள்ளது என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. அதிலும் குறிப்பாக தாய் மாமாவை மணம் முடிக்கும் வழக்கம் உலகிலேயே தமிழ் மற்றும் தெலுங்கு பேசும் இந்து மதத்தைச் சேர்ந்த மக்களிடம் மட்டும் உள்ள தனித்துவமான வழக்க மாகும். அதிலும் தமிழ்நாட்டில் 50% க்கும் அதிகமான மண உறவுகள் இப்படி நெருங்கிய உறவில் ஏற்படுத்தப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக இருக்கும் ஆந்திராவில் கூட 20% மட்டுமே நெருங்கிய உறவு மணம் இருக்கிறது. இதே இந்து மதத்தைப் பின்பற்றும் வட இந்தியாவில் நெருங்கிய உறவில் மணம் முடிக்கும் வழக்கம் அறவே இல்லை. அதை அவர்கள் செய்யத் தகாத மண முறையாக ஒதுக்கி வைத்துள்ளனர்.

### உறவு முறையில் மண உறவு கொள்வதால் என்ன மாதிரியான சிக்கல்கள் வரக்கூடும் ?

மரபணு வழியாக ஏற்படக் கூடிய 3000 வகையிலான நிரந்தர ஊனங்கள் உறவு முறையில் மண உறவு கொள்வதால் ஏற்படும் என்கிறது உலக சுகாதார நிறுவனம் (WHO). இம்மாதிரியான ஊனங்களில் குறிப்பிட்ட சில வகையான மருத்துவ ஊனங்கள் உலகிலேயே தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் மட்டுமே இருப்பதாக அதே உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டு Juvenille Diabetics, Lysosomal Storage Disorder, Madras Motor Neuron Disease, Muscular distraphy, desume muscular distraphy, Cleft lip, mal formation, down syndrome, autism, clients factor, sickle cell anemia, thalesimia.

இவை மட்டுமல்லாமல் diabetics, bp, cancer போன்றவையும் மரபணு ரீதியாக வரக்கூடியவையே. Heart Attack வருவதற்கு காரணமாக உள்ள diabetics, bp போன்றவை மரபணு வழியாக வருவதால் பொதுவாக 50 வயதிற்கு பின் வரக்கூடிய Heart Attack உறவு முறையில் திருமணம் செய்தவர்களின் குழந்தைகளுக்கு 35-40 வயதில் வருவதற்கான வாய்ப்பு அதிகம் ஆகிறது.

## இது எப்படி ஏற்படுகிறது ?

ஆணின் விந்தும் பெண்ணின் கருமுட்டையும் இணையும் போது, இருவரின் மரபணுக்களும் ஒன்றோடு ஒன்று இணைகின்றன. அச்சமயத்தில், இருவரின் அனைத்து மரபணுக் களும் புதிதாக பிறக்கப் போகும் உயிரில் இணைவதில்லை. ஒரே மாதிரியான தீய மரபணு இருவரிடமும் இருக்குமானால், அது இயல்பாக ஒன்றோடு ஒன்று இணைந்து புதிய உயிரில் கலக்கிறது.

எல்லோரின் மரபணுக்களிலும் தீய அணுக்களும் நல்ல அணுக்களும் உள்ளன. ஆனால் இரத்த உறவுடைய இருவரிடம் ஒரே மாதிரியான தீய அணுக்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனால் அவர்கள் இருவரும் உறவு கொள்ளும் போது, அவர்களிடம் உள்ள ஒரே மாதிரியான தீய அணுக்கள் ஒன்றை ஒன்று கண்டறிந்து இணைந்து புதிய உயிரில் கலப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம்.

இந்தத் தீய அணுக்களே மரபணுக் குறைபாடுகளை, நிரந்தர ஊனங்கள், குணப்படுத்த இயலாத நோய்களை உருவாக்குகின்றன.

## அப்படியாயின் நல்ல அணுக்களும் தானே இணைய வேண்டும் ?

பொதுவாக தீய அணுக்கள் ஆதிக்கம் செலுத்துபவை. அதனால்தான் எத்தனையோ நல்ல அணுக்கள் இருந்தும் தீய அணுக்களால் ஏற்படும் குறைபாடுகளை அவற்றால் தடுக்க முடியவில்லை. இவ்வாறு ஆதிக்க இயல்பு கொண்ட தீய அணுக்கள் இயல்பிலேயே, தன்னை ஒத்ததை அடையாளம் கண்டு இணைவதில் தீவிரம் காட்டுபவை. நல்ல அணுக்கள் அத்தனை எளிதில் இணையக் கூடியவை அல்ல என்கிறது அறிவியல்.

## நாங்கள் பார்த்த எத்தனையோ பேர் உறவில் மணம் முடித்து நல்ல குழந்தைகளை பெற்று உள்ளார்களே !

இருக்கலாம். ஆனால் எதற்கு வாய்ப்பு அதிகம் என்பதுதான் கேள்வி. கொசு கடித்தால் மலேரியா வரும் என்பது அறிவியல். எனக்கு வரவில்லையே.. அதனால் அதை நம்ப மாட்டேன் என்பது

அறிவுப்பூர்வமானது அல்ல. வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதுதான் செய்தி.

அத்துடன், கை, கால் முடமாவது, கண் தெரியாமை, வாய் பேசாமை, காது கேளாமை மட்டும் ஊனங்கள் அல்ல. 3000 வகையான மன மற்றும் உடல் ஊனங்கள் மரபணு காரணமாக ஏற்படுகின்றன. இவற்றில் பல வெளிப்படையாகத் தெரியாது. பலவற்றை வளர வளர தான் கண்டறிய முடியும். படிப்பில் குறைபாடாக இருக்கலாம், புரிந்து கொள்வதில் சிக்கல் இருக்கலாம். தெளிவாக புரிய வைப்பதில் சிக்கல் இருக்கலாம். இப்படி எத்தனையோ வகை.

சரி செய்ய முடியாத நோய்கள் அனைத்துமே ஊனங்கள் என்றே வகைப்படுத்தப்படும். அதாவது, சரி செய்ய முடியாத என்றால், இதுவரை மருந்து கண்டுபிடிக்க முடியாத என்ற பொருளில் அல்ல. எடுத்துக்காட்டாக, ஒருவருக்கு கால் முடமாகப் பிறந்தால், அதனை சரி செய்ய முடியாது. வாழ்நாள் முழுவதும் அப்படியேதான் இருக்கும். அதற்கு மாற்றாகவோ, உதவியாகவோ செயற்கைக்கால் போன்றவற்றை பயன்படுத்த லாமே ஒழிய, காலை சரி செய்ய முடியாது. அதே போன்று, மரபணுக்கள், அவை இருக்க வேண்டிய முறையில் இல்லாமல், இயங்க வேண்டிய முறையில் இயங்காமல், மாறி அமைந்தால் அவை உடலில் சில பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இதனையே மருத்துவ ஊனங்கள் என்கிறோம். இவற்றை சரி செய்ய முடியாது.

இன்று கிராமப்புறங்களில் போதிய அளவு இச்செய்திகள் போய் சேராததாலும், மருத்துவ வசதிகள் போதுமான அளவு இல்லாததாலும் தங்கள் குழந்தைகளுக்கு குறைபாடு இருப்பதே தெரியாமல், அவன் படிக்க மாட்டேங்கிறான் என்று அடிப்பதும், மக்குப் பயல் என்று கேலி பேசுவதும் மட்டுமே நடக்கிறது.

**இந்த குறைபாடுகள் உறவு முறைக்குள் மணம் முடித்தால் மட்டும் தான் வருமா ? அந்நியத்தில் மணம் முடித்தால் வராதா ? அவர்களுக்கு இதே போல் ஒரே மாதிரியான தீய அணுக்கள் இருக்காதா ?**

அந்நியம் என்று நாம் மணம் முடிப்பது எல்லாம் நேரடியான இரத்த உறவு இல்லையே தவிர, ஒரே ஜாதிக்குள்தான். ஜாதி என்பது தலைமுறை தலைமுறையாக இரத்த உறவுக்குள் மணம் முடித்து உருவான ஒரு குழுவே ஆகும். ஒரே ஜாதியினர் என்பவர்கள் உறவினர்களே. இதனால் ஜாதிக்குள் மணமுடிப்பது என்பதும் இரத்த உறவில் மணம் முடிப்பதே. இதனால் ஜாதிக்குள்

மணம் முடித்தாலும் ஒரே மாதிரியான தீய அணுக்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. இதனால் மரபணு குறைபாடுகள் வருவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே உள்ளன.

அப்படியே ஜாதி இரத்த உறவு என்றாலும் பல தலைமுறைகளுக்கு முந்திய உறவில் எப்படி சிக்கல் வரும்? மூன்று தலைமுறைகளுக்குச் சிக்கல் இல்லை என்றால் பிரச்னை வராது என்கிறார்களே!

மூன்று தலைமுறைகள் என்பது நம்மால் அறியக் கூடிய கால அளவு. அவ்வளவுதான். நமக்கு நம் தாத்தா பெயர் தெரியும். அவரின் அப்பா பெயரே பலருக்குத் தெரியாது. அதற்கு முந்தைய தலைமுறைகளை தெரிய வாய்ப்பே இல்லை. அப்படி இருக்கும் போது மரபணுக்களை மட்டும் எப்படி கண்டறிய முடியும்? தற்சமயம் மூன்று தலைமுறைகள் வரை கண்டறிவதற்கு அறிவியல் வளர்ந்துள்ளது. அவ்வளவுதான். ஆனால் எத்தனாவது தலைமுறையிலிருந்து நமக்கு குறைபாடுடைய மரபணு வந்தது என்பதை கண்டறிவது இன்னமும் சிக்கலாகவேதான் உள்ளது. அதனால் பல தலைமுறைகள் முந்தைய உறவாக இருந்தாலும் சிக்கலே.

**இப்போதுதான் அறிவியல் வளர்ந்து விட்டதே. கருவில் இருக்கும் போதே குறைபாடுகளை கண்டறியும் தொழில் நுட்பம் வந்து விட்டதே. அதனால் பிறக்கும் முன்பே குறைபாடுடைய குழந்தை என்றால் அழித்து விடலாமே. பின் ஏன் கவலை ?**

உண்மைதான். கரு வளர்ச்சிக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் ஸ்கேன் செய்து, ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் குழந்தையை அழித்து விடலாம்தான். ஒரு சில குறைபாடுகள் இரண்டாம் மாதத்திலேயே தெரிந்து விடும். அந்நிலையில் அழிப்பது எளிது. ஆனால் மூன்றாம் மாதமே ஒரு குழந்தையின் அனைத்து உறுப்புகளும் உருவாகி விடுகின்றன. அதன் பின் அவை வளர வேண்டியது மட்டுமே பாக்கி. இதனால் மூன்றாம் மாதத்திற்கு பின் குழந்தையை அழிப்பது என்பது அக்குழந்தை அதனை உணரக் கூடிய நிலையில் அதை கொலை செய்வதே ஆகும். தவிர்க்க இயலாத நிலையில், இதனை செய்யலாம்தான். ஆனால் இப்படி ஜாதிக்குள் மணம் முடித்தவர்கள் பலருக்கு ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, 7 முதல் 11 முறை வரை இப்படியான கருக்கலைப்பு செய்யும் நிலை ஏற்படுகிறது. **இப்படி குறைபாடுகளினால் கருக்கலைப்பு செய்பவர்களில் 72.2% ஜாதிக்குள் மணம் முடித்தவர்கள் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.**

ஒரு ஆரோக்கியமான குழந்தை உருவாகும் வரை தொடர்ந்து இப்படி கருக்கலைப்புச் செய்ய வேண்டி நேர்கிறது. இது அத்தாயின் உடல் மற்றும் மன நிலையை கடுமையாக பாதிக்கிறது. கரு உருவாவது என்பதே மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்ற நிலை மாறி அச்சத்திற்குரிய ஒன்றாக அத்தாயின் மனதில் படிகிறது. இந்த அச்சமும் சேர்ந்து குழந்தையின் உடல் நிலையை பாதிக்கிறது.

மறுபுறம், தொடர்ந்து கருக்கலைப்பு நடக்கும் பட்சத்தில், குடும்பமும் சமூகமும் அத்தாயை குற்றம் சாட்டி, அவரையே முழுப் பொறுப்பாளி ஆக்கி குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நிறுத்திவிடுகின்றன. இதனாலும் கடும் மன உளைச்சலுக்கு அவர் ஆளாக நேர்கிறது. இம்மாதிரியான குறைபாடுகளுக்கு கணவன் மனைவி இருவருமே பொறுப்பு என்பதை புரிந்து கொள்ள மறுக்கும் பலர், அப்பெண்ணை ஒதுக்கி வைக்கும் நிலையும் ஏற்படுகிறது. இவற்றைத் தவிர்க்க ஒரே வழி ஜாதி மாறி மணம் செய்வது மட்டுமே.

மேலும் அனைத்து குறைபாடுகளையும் கருவிலேயே கண்டறிய முடியாது. பலவற்றை வளர வளரதான் கண்டுபிடிக்க முடியும். சில 10 வயதில் வெளிப்படும். சில 15 வயதில் வெளிப்படலாம். சில 20, 30 வயதில் வெளிப்படலாம். சில 50 வயதில் கூட வெளிப்படலாம். பல குறைபாடுகள், பள்ளிக்குச் செல்லத் தொடங்கிய பிறகு மட்டுமே வெளிப்படும். கருவில் கண்டறியப்படாமல், பிறந்த பிறகு கண்டறியப்பட்டக் குறை பாடுகளை உடைய குழந்தைகளை வளர்ப்பதில் அக்குழந்தையின் பெற்றோர் படும் பாடு கொஞ்சம் நஞ்சம் அல்ல. அதிலும் பெரும்பாலும் இம்மாதிரியான குழந்தைகளை வளர்ப்பதில் தாய் மட்டுமே பெரும் பங்கு வகிக்கிறார். தகப்பன்கள் அக்குழந்தை களை கைவிட்டு விடுகின்றனர்.

குழந்தை பிறப்பு என்பது பெரும்பாலான பெண்களுக்கு 25 வயதுக்கு முன்பே நடக்கிறது. இந்த இளம் வயதில், குறைபாடு டைய குழந்தையை வளர்ப்பதற்காக அத்தாய் தனது அனைத்து சுகங்களையும் விட்டுக் கொடுக்க நேர்கிறது. அவரது வாழ்வே போராட்டமாகிறது. இந்நிலை நமது பெண்களுக்கு ஏற்பட வேண்டுமா? நமது ஆசைக் காகவும் கவுரவத்துக்காகவும் ஜாதிக்குள் மணம் முடித்து நம் பெண்களின் எதிர்காலத்தையே அழிக்க வேண்டுமா? நம் பெண்கள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்று மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழ ஒரே வழி ஜாதி மாறி மணம் முடிப்பதே.

**இப்படி எல்லாரும் வெளியிலேயே பண்ணா ஜாதிக்கட்டுமானம் குலைஞ்சிராதா ?**

*ஜாதி கட்டுமானம் முக்கியமா அல்லது ஆரோக்கியமான பிள்ளைகள் முக்கியமா என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும். ஆரோக்கியமான அடுத்தத் தலைமுறை இல்லாமல் ஜாதி கட்டுமானத்தை மட்டும் காப்பாற்றி என்ன பயன்? யாருக்காக அந்த ஜாதிக் கட்டுமானம்?*

**எங்க ஜாதிக்குன்னு ஒரு பெருமை இருக்கு. ஒரு திறமை இருக்கு. அந்தத் திறமை எல்லாம் மரபணு வழியா எங்க பிள்ளைகளுக்குப் போகணும்னா நாங்க ஜாதிக்குள்ளதான மணம் முடிக்கணும் ?**

*ஜாதிக்கென்று திறமையும் குணமும் இருப்பதாக சொல்வதே மாயை. ஒரு குழந்தை வளரும் சூழலைப் பொருத்தே அதன் திறன்களும் குணங்களும் அமைகின்றன. இங்கு தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தை ரஷ்யாவில், ஒரு ரஷ்யக் குடும்பத்தில் வளர்ந்தால் ஒரு ரஷ்யக் குழந்தையாகவே வளரும். அந்தப் பண்பாடு மட்டுமே அதற்குத் தெரியும். அதன் இயல்பும் அதற்குத் தக்கவாறே இருக்கும். அதனால் ஜாதிக்கென்று குணம் என்பதெல் லாம் மாயை மட்டுமே.*

*சரி. அப்படியே ஜாதிக்கென்று திறமையும் குணமும் இருப்பதாக எடுத்துக் கொண்டாலும், உங்கள் குழந்தைக்கு அந்தத் திறன் வருமா அல்லது குறைபாடு வருமா என்பது நீங்கள் தீர்மானிக்கக் கூடியது அல்லவே. அப்படி ஒரு ஆபத்தான முயற்சியை ஏன் எடுக்க வேண்டும்.*

**சொந்தம் விட்டுப் போகக் கூடாது இல்லைங்க.. அக்கா தங்கச்சிங்க உறவு அடுத்தத் தலைமுறைக்கும் தொடரணும்னா இப்படி மணம் முடித்தாதான தொடரும் ?**

*சொந்தம் விட்டுப் போகக் கூடாதா ... சொத்து விட்டுப் போகக்கூடாதா? மண உறவு என்பதே சொத்துப் பரிமாற்றம் மற்றும் சொத்தைத் தக்க வைப்பதற்கான ஒரு கருவி மட்டுமே. சொந்தத்திற்குள் மணம் முடித்தால் சொத்து வெளியே செல்லாமல் சொந்தத்திற்குள்ளேயே இருக்கும் என்பதே இதன் பின்னணி.*

**நான் எங்க அக்கா மகளை / அத்தை மகளை காதலிக்கிறேன். அதற்காகவே அவரை மணம் முடிக்க விரும்புகிறேன். உறவு முறைக்**

**காகவோ, ஜாதிக்காவோ, குடும்பத்தினரின் கட்டாயத்துக்காகவோ, சொத்துக்காகவோ இல்லை. காதல் மணத்தை ஆதரிக்கும் நீங்கள்இதை எப்படி எதிர்ப்பீர்கள் ?**

ஒரு இந்துவிடம், அண்ணன் மகளை காதலிப்பாயா? சித்தப்பா, பெரியப்பா மகளை காதலிப்பாயா? என்று கேட்டால் அவற்றை அவர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. ஆனால் முஸ்லிம்களில் சித்தப்பா மகளை மணம் முடிப்பார்கள். இந்துக்களுக்கு அது அசிங்கமாகப்படுகிறது. அதிலும், வட இந்தியாவில் உள்ள இந்துக்கள் நேரடி உறவுக்குள் மணம் செய்யவே மாட்டார்கள். அவர்கள் நம்மை கேலி பேசுகிறார்கள். அது எப்படி சிறு வயதிலிருந்து ஒன்றாகவே வளர்ந்த அத்தை மகள், மாமன் மகளை வேறு பார்வை பார்க்க முடியும் என்று அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆக இது சூழலுக்கேற்ப உருவாகும் உளவியல்.

சிறு வயதிலிருந்து அக்கா மகளை, அத்தை மகளை, மாமன் மகளை மண உறவாகவே பேசி மனதில் விதைத்து விட்ட விதைதான் காதல் என்று தவறாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. சித்தப்பா மகள், தங்கையாக ஓர் இந்துவின் மனதுக்குள் விதைக்கப்பட்டுள்ளதால் அவரிடம் அப்படியான எண்ணம் தோன்றவில்லை. அவ்வளவுதான். ஒரு வேளை முஸ்லிமாக பிறந்திருந்தால் சித்தப்பா மகளை காதல் எண்ணத்தோடு பார்க்க வைத்திருக்கும். ஆக, செயற்கையாக விதைக்கப்பட்ட இந்த உணர்வை காதல் என்று நம்பி, அதற்காக ஒரு மண உறவை ஏற்படுத்தி, அடுத்த தலைமுறையை, நம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வது அறிவற்ற செயல்.

**ஜாதி மாறி மணம் முடித்தால் சேர்த்துக்க மாட்டார்களே ! சாமி குத்தம் ஆகிவிடுமே !**

இந்து மதத்தின் சட்ட நூலாக இருப்பது மனு சாஸ்திரம். அந்த மனு சாஸ்திரம்தான் மக்களை நான்கு வர்ணங்களாக பிரிக்கிறது. அதே மனு சாஸ்திரம்தான் ஜாதிக்குள் மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்கிறது.

நான்கு வர்ணங்களாக மக்களைப் பிரித்த மனு சாஸ்திரத்தில் எங்கே இருந்து ஜாதிகள் வந்தன? அதிலும் சூத்திரர்கள் மட்டும் பல்லாயிரம் ஜாதிகளாக எப்படி இருக்கின்றனர்? மனு சாஸ்திரத்தின் படி வர்ண கலப்பினால் பிறந்தவர்களே சூத்திரர்கள். அதனால்தான் தேவடியா மக்கள் என்ற பொருளில் அவர்கள் சூத்திரர்கள்

என்றழைக்கப்படுகின்றனர். அதாவது சூத்திரர் என்ற சொல்லுக்கான பொருளே தேவடியா மக்கள்.

நான்கு வர்ணங்களைச் சேர்ந்தவர்களும் ஒருவருடன் ஒருவர் கலந்து, மணம் முடித்தோ அல்லது மணம் முடிக்காத உறவின் மூலமோ பிறந்தவர்கள் - அப்படி பிறந்தவர்களின் அடுத்தடுத்த தலைமுறை மீண்டும் ஒருவருடன் ஒருவர் கலந்ததினால் பிறந்தவர்கள் என முழுக்க முழுக்க கலப்புகள் அதிகமானதால் உருவானவையே இந்த சூத்திர, பஞ்சம ஜாதிகள். (விரிவாக அறிய: தோழர் பெரியார் எழுதிய விபச்சாரமே ஜாதிக்குக் காரணம் என்ற குடி அரசு 16.11.30 கட்டுரை)

அதனால் அவர்கள் புனிதமற்றவர்கள்; அதனால்தான் அவர்கள் கீழ் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்கிறது மனு சாஸ்திரம். அதாவது வர்ணம் மாறி ஜாதி மாறி மணம் முடித்ததால் பிறந்தவர்களே சூத்திரர்களும் பஞ்சமர்களும். இப்படி உருவான ஜாதிகள் மீண்டும் ஒருஜாதியோடு மற்றொரு ஜாதி இணைவது எவ்வகையில் தவறு? ஏற்கெனவே புனிதமற்றவர்களாக ஒதுக்கப்பட்டுவிட்ட இவர்கள் எவ்வகையில் ஜாதிக்குள் மணம் முடித்து தங்கள் புனிதத்தைக் காக்கப் போகிறார்கள்?

ஆக, குறிப்பிட்ட மக்கள் குழு, அதாவது பார்ப்பனர்கள், பிறர் மீதான தங்கள் பொருளாதார, சமூக, அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள உருவாக்கியதே இந்த மாதிரியான மத சட்டங்கள்.

## நான் மேல் ஜாதியில பொண்ணு கேட்டால் கொடுப்பார்களா ?

ஜாதிய படிநிலையில் மேல் இருப்பவர்கள், தங்கள் சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும், அதை பிறர் கைப்பற்றாத வகையில் இருப்பதற்கும், தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் தங்களைச் சுற்றி ஒரு சமூக வேலியை அமைத்து, தங்களுக்குள் மட்டுமே மண உறவு கொண்டனர். அதனைப் பின்பற்றி அடுத்தத்தடுத்த நிலையில் இருந்த ஜாதியினரும் தங்களின் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள அதை பின்பற்றி தங்கள் ஜாதிக்குள் மணமுடித்தனர். ஆக கீழ் நிலையில் இருப்பவர்கள், வேறு வழியின்றி அதையே பின்பற்றுகின்றனர்.

இவ்வாறு ஜாதிக்குள் நடக்கும் மண முறையை, அக மண முறையை அகற்றாமல், ஜாதிய படிநிலையை - ஒரு சிலர் கையில் மட்டும் இருக்கும் அதிகாரத்தை - அவர்கள் செலுத்தும் சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை அகற்ற முடியாது.

## காலம் காலமா, பல்லாயிரம் ஆண்டுகளா ஜாதிக்குள்ள திருமணம் செஞ்சு பழகிட்டோம். அதை எப்படி மாற்ற முடியும் ?

அண்மையில் ஹார்வர்டு மருத்துவப் பள்ளியின் மரபணுத் துறை பேராசிரியரான புகழ்ப் பெற்ற டேவிட் ரெயிஷ் மற்றும் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரும் மரபணுத் துறையில் ஆய்வறிஞருமான லால்ஜி சிங் ஆகியோரின் தலைமையில் அய்தராபாத்தில் உள்ள Center for Cell and Molecular Biology - இன் துணை இயக்குநர் குமாரசாமி தங்கராஜ் போன்ற ஆய்வறிஞர்கள் அடங்கிய குழு இந்திய சமூகத்தின் மூதாதையர்கள் பற்றிய மரபணு அடிப்படையிலான ஆய்வினை மேற்கொண்டது. அந்த ஆய்வுக்குழு, கடந்த 2009-ஆம் ஓர் அறிக்கை வெளியிட்டது. அதன்படி, இந்தியாவில் 1900 ஆண்டுகளாக மட்டுமே ஜாதிக்குள் மணம் செய்யும் முறை ஏற்பட்டது என்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக மனுவின் காலத்திற்கு பின் மட்டுமே ஜாதிக்குள் திருமணம் செய்யும் முறை ஏற்பட்டதாக வரலாற்றறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

மனுவின் காலமும் இந்த மரபணு ஆய்வில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் காலமும் ஏறக்குறையே ஒன்றே. ஆக.. இந்தியாவில் ஜாதிக்குள் மணமுடிக்கும் முறை வெறும் 1900 ஆண்டுகளாக மட்டுமே நடைமுறையில் உள்ளது என்று வரலாற்று அறிஞர்களும் மானுடவியல் அறிஞர்களும் உறுதி செய்து வந்தை தற்போது அய்தராபாத்தில் உள்ள CCMB, அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம் மற்றும் பனாரசில் உள்ள இந்துப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் தலைமையில் நடத்தியுள்ள இந்த மரபணு ஆய்வும் உறுதி செய்துள்ளது.

இவ்வாறு 1900 ஆண்டுகளுக்கு முன் வரை ஜாதி கடந்து கலந்து மணம் புரிந்து ஒரே இனமாக வாழ்ந்த இந்த சமூகத்தில் ஜாதிக்குள் மணம் செய்யும் இந்த அகமண முறையே பிரிவினைகளை வலுப்படுத்தி உள்ளது. தமிழரோ, திராவிடரோ, இந்தியரோ - நீங்கள் எந்த அடையாளத்தை விரும்பினாலும் - ஜாதி கடந்து மணம் முடித்து ஜாதி அடையாளத்தைத் தகர்ப்பதே முதன்மைத் தேவை என்பதையே இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

## வேறு ஜாதியில் மணம் புரிவதால் ஊனத்தைத் தவிர்க்கலாம் என்பதை தவிர வேறு என்ன பலன் ?

இரண்டு தொடர்பற்ற மரபணுக்கள் இணையும் போது முற்றிலும் புதிய ஒரு மரபணு உருவாகிறது. அப்படி புதிதாக உருவாகும் மரபணுக்களே பரிணாம வளர்ச்சிக்கான படிக்கற்கள்.

குரங்கிலிருந்து மனிதன் உருவானது இப்படியான புதிய புதிய மரபணுக்களின் உருவாக்கத்தால்தான். சொல்லப் போனால், Big Bang எனப்படும் பெரும் வெடிப்பினால் உலகம் உருவான போது ஓரணு உயிரிகளே இருந்தன. மாறும் சூழலுக்கு ஏற்ப, தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்ட உயிரிகள் பரிணாம வளர்ச்சியின் ஒரு பகுதியாக இவ்வுலகில் தொடர்ந்து வாழ்ந்தன. எனவே மாற்றத்தை ஏற்படுத்துவதும், மாற்றத்திற் குள்ளாவதும், மாற்றத்தில் சிறந்ததை தேர்ந்தெடுத்து தக்க வைப்பதும் உயிரின் இயற்கை.

அதேபோல் இனப்பெருக்கம் என்பது சிறந்ததைத் தேர்ந்தெடுக்கும் உயிரியல் இயற்கையின் அடிப்படையில் அமைந்த ஒன்று. சிறந்தவை மட்டுமே தங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளும். இந்த இயற்கை விதிக்கு முற்றிலும் முரணானது அகமண முறை. பரந்த உலகில் தனக்கு பொருந்தக் கூடிய சிறப்பான ஓர் இணையைத் தேர்ந்தெடுக்கும் இயற்கை உந்துதலை அடக்கி, அதற்கான வாய்ப்பை மறுத்து சிறிய வட்டத்திற்குள் முடக்குவதே அக மண முறை.

உலகில் மனித இனம் தோன்றிய போது முதன் முதலாக இருந்தவை 4 இனங்கள் மட்டுமே. இன்று இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 72 மரபினங்களின் கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நான்காக இருந்த இனங்கள் 72-க்கும் மேற்பட்ட துணை இனங்களாக பெருகியது எப்படி? இனக் கலப்பினால் மட்டுமே அது சாத்தியமாகி இருக்கிறது.

எனவே, இரண்டு இனங்களின் மரபணுக்கள் கலக்கும் போது முற்றிலும் புதிய மரபணு உண்டாகி அது பரிணாம வளர்ச்சியின், அறிவாற்றலின், அடுத்தக் கட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. புதிய புதிய சிந்தனைகள் உருவாகின்றன. இவ்வாறு வளர்ந்த மனித இனம், தேங்கி நிற்பதற்கு அகமண முறை காரணமாக இருக்கிறது. அகமண முறை இல்லாத மேற்கத்திய நாடுகளின் அறிவாற்றல், அறிவியல் வளர்ச்சியுடன் அகமண முறைக்குள் முடங்கி நிற்கும் நம் நாட்டின் அறிவாற்றல், அறிவியல் வளர்ச்சியை ஒப்பிடும் போது அக மண முறை எந்த அளவுக்கு நம் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பது விளங்கும்.

# விபசாரமே ஜாதிக்குக் காரணம் - பெரியார்

.....ஒரே நாட்டு மக்களை பிறவியில் பல ஜாதியாகப் பிரிக்கப் பட்டிருப்பது நமது இந்தியாவில் தான் இருக்கின்றதே தவிர வேறெங்கும் இல்லை என்பது உலகக் கல்வி ஞானமுடையவர்கள் யாவரும் அறிந்ததாகும். அந்தப்படி இந்தியாவில் பிரிக்கப் பட்டிருக்கும் ஜாதியும் எவ்வித கொள்கைக்கும் பொருத்த மில்லாமல் வெறும் பிரிவுக்கும் இழிவுக்கும் மாத்திரம் ஆதாரமாய் இருப்பதைத் தவிர மற்றபடி அவற்றால் யாதொரு பயனும் இல்லாமல் இருப்பதும் யாவரும் அறிந்ததாகும். எனவே இப்படிப்பட்ட ஜாதி உயர்வும் தாழ்வும் எப்படி ஏற்பட்ட தென்றும் இதற்கு ஆதாரம் என்ன என்பதையும் சற்று கவனிப்போம்.

...இப்போது அநேக ஜாதிகள் இருப்பதற்கு என்ன காரணம் என்று கவனித்துப் பார்ப்போமானால் அதற்குக் கிடைக்கும் சமாதானம் மிகமிக இழிவைத் தரத்தக்கதாகவே இருப் பதை உணரலாம். அதாவது “ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் ஜாதி முறை தவறி கலப்பு விவாகம் செய்து கொண்டதாலும் கலப்பு விபசாரம் செய்து கொண்டதாலும் ஏற்பட்ட பிரிவு”களென்றும், அப்படிப் பட்ட பிரிவுகளுக்கு பஞ்சம ஜாதியார்கள் என்று பெயர் கொடுக்கப் பட்டிருக் கின்றதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

இன்று தமிழ் நாட்டில் பிரபல ஜாதியும் பிரமுக ஜாதியும் என்று சொல்லிக் கொள்ளப்படுவதான வேளாள ஜாதியார் எனப்படு பவர்களே பஞ்சம ஜாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம ஜாதி யிலும், பிராமணன் க்ஷத்திரிய குலப்பெண்ணை சோரத்தால் கலந்த தால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக் கின்றன. இவர்களில் இந்தப்படியான வேளாளர் என்பவர்களில் விவசாயம் செய்பவர் களாயிருந்தால் அவர்களுக்கு காணியாளர் என்று பெயர் என்றும், மற்றபடி “சிற்றரசு, மந்திரித்துவம்” முதலிய பதவிகளில் இருப்பவர் களாயிருந்தால் அவர்களுக்கு வேளான் சாமந்தர் என்கின்ற பெயர் என்றும், குறிக்கப்பட்டிருப்பதுடன் இவற்றிற்காதாரம் சுப்பர போதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், சாதி விளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

...தவிர மேல் கண்ட பிராமண ஜாதி ஆண், க்ஷத்திரிய ஜாதி பெண்ணை விவாகம் செய்து கொண்டதால் பிறந்த பிள்ளைகளே சவர்ணர் எனவும் தெலுங்கர் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அதாவது இது தெலுங்கு பாஷை பேசும் தெலுங்கு தேசத்தவர் அனைவரையும் குறிப்பிடத்தக்கதாகவே குறிக்கப் பட்டிருக்கிறது.

அதுபோலவே பிராமணன் வைசியப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை அம்பட்டன் என்றும், சோரத் தால் பிறந்த பிள்ளைகள் குயவர் என்றும் நாவிதர் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே பிராமணன் சூத்திரப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை பரதவர் அதாவது செம்படவர் என்றும், சோரம் செய்ததால் பிறந்தவர் வேட்டைக் காரர் அதாவது வேடுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபசாரம் செய்ததால் பிறந்தவர்கள் சண்டாளர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பிராமணகுலப் பெண்களுடன் சண்டாளர் கூடிப்பிறந்த பிள்ளைகள் சருமகாரர் அதாவது சக்கிலிகள் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. க்ஷத்திரிய குலப்பெண்ணுடன் சண்டாளர் முதலியவர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் வேணுகர், (அதாவது வேணுகானம் செய்பவர்களும்) கனகர் (அதாவது தங்க வேலை செய்பவர்களும்) சாலியர் (அதாவது சாலியர் முதலிய நெசவு வேலை செய்வோர்களும்) ஆவார்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

இதுபோலவே இன்னும் இரண்டொரு ஆராய்ச்சி நூல்களில் அதாவது அபிதான கோசம், அபிதான சிந்தாமணி முதலிய எல்லா இந்து பண்டிதர்களாலும் ஆதாரமாய் கொண்டாடும் புத்தகங்களில் மற்றும் பல ஜாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு 4 ஜாதி தவிர மற்ற ஜாதிகள் எல்லாம் மேல் கண்ட நான்கு ஜாதிக்குள் மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் கல்யாணம் செய்தும், விபசாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள் என்றே கூறப் பட்டிருக்கின்றன. செட்டியார்மார்களையும் ஆசாரிமார் களையும் பற்றி மிக மிக இழிவாகவே கூறப்படுகின்றது.

...உண்மையில் யாருக்கு யார் பிறந்திருந்தாலும் அதனா லேயே குற்றம் சொல்வதற்கில்லை என்பது நமது கொள்கை யானாலும் ஒரு இழிவை கற்பித்து அதை நம் மக்கள் மீது சுமத்தி ஒரு பெரிய சமூகம் நிரந்தரமாய் அடிமையாயும் காட்டுமிராண்டி யாயும் இருப்பதற்குச் செய்த காரியமே ஜாதிப் பிரிவும் பாகுபாடும் என்பதை எடுத்துக் காட்டவும் அவ்விதம் கொடுமையை ஒழிப்பதற்காகவுமே இதை எழுதுகிறோம். - குடி அரசு 16.11.1930

# திராவிடர் திருமணம் - அதி அசுரன்

தமிழன், தெலுங்கன், கன்னடன், மலையாளி, குஜராத்தி, பீகாரி என இந்தியத் துணைக்கண்டப் பகுதியில் வாழும் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தமிழீழத் தமிழனாக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் சிறைப்படுத்தி வைத்திருப்பது பார்ப்பன மனுசாஸ்திரப் பண்பாடு. அதை அனைத்து தேசிய இனங்களின் அடையாளங்களையும் சிதைத்து, பார்ப்பன மேலாதிக்கப் பண்பாட்டை திணித்து இன்றளவும் நடைமுறைப் படுத்தி வருபவர்கள் ஆரியப்பார்ப்பனர்கள். நமது வாழ்க்கையின் முக்கியமான பண்பாட்டு நிகழ்வான திருமணம் என்ற களத்தில் மனுசாஸ்திரம் விதித்த கட்டளை என்ன என்று பார்ப்போம்.

“துவிஜர்கள் ( பிராமணர், க்ஷத்திரியர் ) முக்கியமாக திருமணம் செய்யும் போது தன் ஜாதியிலேயே செய்துகொள்ள வேண்டும்.” -மனு சாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 12

“சூத்திரன் தன் ஜாதியில் மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும்.” - மனு சாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 13

“பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் தன் ஜாதியில் பெண் கிடைக்காத ஆபத்துக்காலத்திலும் சூத்திரப்பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது.” -மனு சாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 14

“தன் ஜாதியைவிட தாழ்ந்த ஜாதியில் திருமணம் செய்பவர்கள் தங்கள் குலத்தையும், குழந்தைகளையும் சூத்திரத் தன்மையை அடைய வைக்கிறார்கள்.” - மனு சாஸ்திரம் அத்தியாயம் 3, ஸ்லோகம் 15

எந்த ஒரு ஜாதிக்காரனும் தன் ஜாதியைத் தாண்டி பெண் பார்க்கக்கூடாது என்ற மனுவின் பார்ப்பனக் கட்டளையை உடைத்தெறிந்தவர்கள் எத்தனைபேர்? ஆரியப் பண்பாட்டை மீறியவர்கள் எத்தனை பேர்?

பார்ப்பன, இந்துப்பண்பாடு திருமணம் குறித்த தனது கருத்தைத் தெளிவாக் கூறியுள்ளது. தமிழ்ப்பண்பாடு திருமணம் குறித்து வரையறுப்பது என்ன? இதோ தொல்காப்பியம் கூறுகிறது.

பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே - 1219

பிறப்பு, குடிமை, ஆண்மை அல்லது பெண்மைப் பண்பு, வயது, அழகு, காதல், அறிவு, பரிவு,அடக்கம், செல்வம் ஆகியவற்றில் சரிநிகர்த்தவாராக இருக்க வேண்டும். முதல் பொருத்தம், முக்கியப் பொருத்தமாக பிறப்புப் பொருத்தத்தை முன்வைக்கிறது தொல்காப்பியம். தொல்காப்பியக் காலத்திலேயே திருமணத்திற்கு ஜாதிப் பொருத்தம், ஜாதிக் கடமை, ஜாதிப் பண்பாட்டுப் பொருத்தம் தான் அடிப்படையாகப் பார்க்கப் பட்டுள்ளது.

உடன்போக்கு, களவுமணம் என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் கூறும் காதல் திருமணங்கள் சங்க காலத்தில் நடந்திருக்கின்றன. குறிஞ்சிப்பாட்டில் கபிலர் எழுதிய பாடல் ஒன்றில்

கொடுப்பினன் குடைமையும் குடிநிர லுடைமையும்
வண்ணமம் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை
நிகழ்ந்த வண்ணம் நீநனி யுணரச்
செப்பல் ஆன்றிசின் சினவாது ஈமோ

சங்க காலத் தமிழர்கள் தமது மகன் அல்லது மகள் திருமணத்தின் போது குடிப்பொருத்தம் அதாவது ஜாதிப் பொருத்தம் இருக்கின்றதா? செல்வப்பொருத்தம் இருக்கின்றதா? என எண்ணிப் பார்த்தே மண நிகழ்விற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அதனை எண்ணிப் பார்க்காமல் ஒருவனைக் காதலித்து விட்டாள் தலைவி. அவள்மீது கோபம் கொள்ளாமல் பொறுத்து அருளும்படி தலைவியின் தோழி தாயிடம் கெஞ்சுகிறாள். அதைத்தான் இந்தப்பாடல் தெரிவிக்கிறது.

இதுபோல களவுக்காதல், உடன்போக்குக் காட்சிகள் சங்க இலக்கியங்களில் ஏராளமாக உள்ளன. ஜாதியைக் கடந்தும் காதலித்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் காதல்கள் இளவரசன் - திவ்யா காதலைப் போலவே எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கின்றன. ஒரே ஜாதிக்குள் ஒரே குலத்திற்குள் கொண்ட காதல்கள் திருமணத்தில் முடிந்திருக்கின்றன. அதைத்தான் கலித்தொகையும், குறிஞ்சிப் பாட்டும் நமக்கு உணர்த்துகின்றன.

நம்மை வழிநடத்தும் ஆரியப்பண்பாடோ, தமிழ்ப் பண்பாடோ எதுவாக இருந்தாலும் அவை திருமணங்களில் ஜாதி மீறுதலைக் குற்றமாகத்தான் காட்டியுள்ளன. இவற்றுக்கு மாற்றாக பெரியார் தொடங்கிவைத்த திராவிடர் பண்பாடுத் திருமணங் கள் முதலில் பார்ப்பனச் சடங்குகளை மட்டும் மறுத்த சுயமரியாதைத் திருமணங்களாகத் தான் தொடங்கின. சுயமரியாதைத் திருமணங்கள் தொடக்கத்தில் ஒரே ஜாதிக்குள் தான் நடை பெற்றன.

பெரியார் தனது குடிஅரசு ஏட்டில் 1929 ஆம் ஆண்டே எழுதுகிறார்.

"சமீப காலத்தில் எங்கும் சுயமரியாதைத் திருமணங்கள் நூற்றுக்கணக்காய் நடந்ததாக செய்திகள் வந்து கொண்டிருப் பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.. .இவ்வியக்கம் தோன்றிய இவ்வளவு சீக்கிரத்தில் பார்ப்பனர்களை நீக்கிய திருமணங்களும், மூடச்சடங்கை நீக்கிய செய்கைகளும் சந்தோஷ மடையத்தக்க அளவு நடந்து வந்தாலும், விதவா விவாகம், கலப்பு மணம் முதலியவைகள் நாம் எதிர்பார்த்த அளவுக்கு 100 ற்கு 1 - பங்கு கூட நடத்தப்பட்டதாய் சொல்வதற் கில்லை. தோழர்கள் அதற்கு முயற்சி செய்யவேண்டும்." குடி அரசு - 15.09.1929

தொடர்ந்து 1929 ஆம் ஆண்டிலிருந்தே ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடைபெறத் தொடங்கிவிட் டன. ஜாதி மறுப்பு, மதச்சடங்குகள் மறுப்பு, பார்ப்பன புரோகித மறுப்புத் திருமணங்கள், குழந்தை குட்டிகளுடன் திருமணம், முதல் கணவன் சம்மதத்துடன் மறுமணம், முதல் மனைவியுடன் மனம் ஒன்றி வாழ விரும்பாத கணவனுக்கு, இரண்டாவது திருமணம் என திருமண முறைகளில் ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக இருந்த இந்து மதத்தடைகளை உடைத்தெறிந்து உண்மையான அறிவியல் முறையி லான திருமணங்களை பெரியார் நடத்திவைக்கத் தொடங்கினார்.

"நாடார் நாடாரையும், வன்னியர் வன்னிய ரையும், நாயுடு நாயுடுவையும், அய்யர் அய்யரையும், முதலியார் முதலியாரையும், ஆதிதிராவிடர் ஆதி திராவிடரையுமே திருமணஞ்செய்து கொண்டிருந்தால், இன்னும் பத்து நூறாண்டுகள் ஆனாலும் ஜாதி ஒழியப்போவதில்லை." என முழங்கினார்.

அடுத்தபடியாக அடுத்தகட்ட விமர்சனத் தையும் தொடங்கு கிறார். தான் உருவாக்கிய புரட்சிகரத் திருமணங்கள் வெறும் சடங்காக - நாகரீக நடவடிக்கையாக - ஆடம்ப விழாக் களாக நடத்தப் பட்டு வருவதை கடுமையாக விமர்சிக்கிறார்.

பதிவுத்திருமணம் மட்டுமே போதும். அதற்கு சாட்சிக் கையெழுத்திற்காக இரண்டு நபர்கள் இருந்தால் போதும். அதற்கு மேல் திருமணத்திற்கு ஆட்களைக் கூட்டுவதையும், செலவு செய்வதையும் குற்றமென்கிறார்.

அப்படி ஜாதி - மதச்சடங்கு - ஆடம்பர மறுப்புத்திருமணம் செய்துகொண்டாலும் அந்த மணவாழ்வில் ஆண் - பெண் ஏற்றத்தாழ்வு அறவே கூடாது என்கிறார்.

1929 லேயே "இன்பத்திற்காக கல்யாணம் என்றால் அதற்கேற்ற முறையில் கல்யாணத்திட்டம் அமைக்கப்பட வேண்டுமே ஒழிய மற்றப்படி இன்பமும் காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும் உலக விருத்திக்கு என்று புலபுலென பிள்ளைகளைப் பெறுவதற்கும் ஆண்மக்களுக்கு அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதானால், அம்மாதிரி கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதைவிடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரத்தோடு நடந்து கொள்வதையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்" என பெண்கள் தனித்து வாழ்வதை ஆதரித்து எழுதுகிறார்.

திருமணங்களைப் பற்றி மிகக்கூர்மையாக "சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சியில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கல்யாணங்களை நாம் விபசார வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றார்.

ஆரியப் பண்பாட்டுக்கு மாற்றாக - சங்கத்தமிழ் இலக்கியங்கள் காட்டும் பண்பாட்டிற்கு மாற்றாக திருமணம் என்னும் களத்தில் பெரியார் காட்டும் திருமண முறைகளையே நாம் முன்மொழிகிறோம்.

ஜாதி மறுத்து - மதச்சடங்குகளை மறுத்து - நமது தினசரி வருமானத்தில் 10 நாள் வருமானத்திற்கு மேல் செலவு செய்யாமல் - பதிவு அலுவலக அளவில் நடக்கும் திருமணங்களே திராவிடர் திருமணங்கள்.

இவையும் இனி வளர்ச்சிப் போக்கில் லிவிங் டுகெதர், திருமணமுறையின்றி ஒத்த மனமுடைய இணையர்கள் ஒன்றாய் வாழும் நிலைநோக்கிச் செல்ல வேண்டும்.

"ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்கு 'திருமணம்' என்ற ஏற்பாடுதான் நிரந்தரமானது என்று கருத வேண்டியதில்லை. உலக விஷயங்கள் அனைத்திலும் மாற்றங்கள் ஏற்படுவது போல திருமண முறையில் மாற்றம் ஏற்படுவது மட்டு மல்லாது திருமண முறையே மறைந்து போகக்கூடும்"

திராவிடர் திருமண முறை செல்லும் திசை இதுதான்.

( திருப்பூரில் 2013 அக்டோபர் 20 இல் நடைபெற்ற திராவிடர் வாழ்வியல் விழாவில் வெளியிடப்பட்ட திராவிடர் பண்பாட்டு மலரில் இடம்பெற்ற தோழர் அதி அசுரன் கட்டுரை)